www.uplankajobs.com

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

**இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தில் வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் இலங்கை பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.**

01. **செயலாளர் பதவி - பதவி 01**

**கல்வித் தகைமைகள் :**

வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்கள் :

(i) இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நீதி தொடர்பான இளங்கலை பட்டத்தை பெற்றிருத்தல்.

(ii) பல்கலைக்கழக பட்டத்தினை பெற்றதன் பின்னர் பதவி தொடர்பான விடயத்துறையில் குறைந்தது ஒரு வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட துறைசார் நிறுவனமொன்றிலிருந்து சட்டத்தில் துறைசார் தகைமையொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MM 1-3-2016 : ரூபா 55,925.00 -10 × 1,375 - 15 × 1,910 - ரூபா 98,325.00

02. **ஆய்வு உத்தியோகத்தர் பதவி - பதவி 01**

**கல்வித் தகைமைகள் :**

வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்கள் :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டம் தொடர்பான இளங்கலை பட்டத்தை பெற்றிருத்தல். அத்துடன் கல்வி ஆராய்ச்சி அல்லத நீதித்துறை தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு வருட கால கல்வி ஆராய்ச்சி அல்லது நீதித்துறை தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு வருட கால அனுபவத்துடன் உயர் நீதிமன்றத்தில் பதிவு பெற்ற ஒரு சட்டத்தரணியாகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : AR 1-2016 : ரூபா 51,285.00 -5 × 1,135 - 5 × 1,335 - 15 × 1,590 - ரூபா 87,485.00

03. **நூலகர் பதவி - பதவி 01**

**கல்வித் தகைமைகள் :**

வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்கள் :

(i) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் ஒன்றில் க. பொ. த. (சா/தர) பரீட்சையில் விஷேட சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) க. பொ. த. (சா./தர) பரீட்சையில் கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் விஷேட சித்தியுடன் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். இதில் குறைந்தது ஐந்து பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும். இதைத் தவிர க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து நூலக அறிவியலில் மூன்று வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் அல்லது இலங்கை நூலக சங்கத்தில் நூலக அறிவியல் தொடர்பாக மூன்று வருட டிப்ளோமா பாடநெறியில் சித்தி பெற்றிருக்க வேண்டும் அல்லது தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) தரம் 05 க்கு குறையாத நிபுணத்துவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : MA2-2-2016: ரூபா 30,310.00 -10 × 300 - 7 × 350 -4×600 - 20× 710 - ரூபா 52,360.00

*04.* ***மென்பொருள் மற்றும் வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் பதவி - பதவிகள் 02***

**கல்வித் தகைமைகள் :**

*வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்கள் :*

(i) *மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மென்பொருள் மற்றும் வன்பொருள் தொழில்நுட்பங்களில் தேசிய தொழிற்றகைமை* (NVQ) *நிலை 05 க்கு குறையாத நிபுணத்துவத்தைப் பெற்றிருத்தல் மற்றும்*

(ii) *தகைமையைப் பூர்த்தி செய்த பின்னர் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது மூன்று வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.*

***சம்பள அளவுத்திட்டம்*** : MA*2-2-2016: ரூபா 30,310.00 -10 × 300 - 7 × 350 -4 ×600 - 20 × 710 - ரூபா 52,360.00*

*05.* ***முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) - பதவிகள் 02***

**கல்வித் தகைமைகள் :**

*வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்கள் :*

(i) *க. பொ. த. (சா./தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ், ஆங்கிலம் கணிதம் உட்பட குறைந்தபட்சம் 04 பாடங்களிலும் விஷேட சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

(ii) *க. பொ. த. (உ/தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களிலும் சித்தி பெற்றிருக்க வேண்டும். (பொது அறிவுப் பரீட்சை தவிர)*

*உள்ளக விண்ணப்பதாரர்கள் :*

*பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்த முதன்மை மட்ட தொழில்நுட்பம் சாராத அரை-தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப சேவை வகைக்கு உட்பட்ட பணியாளர்கள்*

(i) *சிங்களம்/தமிழ், ஆங்கிலம் கணிதம் உட்பட குறைந்தது நான்கு பாடங்களில் விஷேட சித்தியுடன் க. பொ. த. (சா/தர) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணினி தட்டச்சு அல்லது அதுபோன்ற வேறு ஏதேனும் ஒரு பாடத்திட்டத்தை முடித்திருப்பது மேலதிக தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.*

(ii) *தற்போதைய பதவியில் சேவை உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.*

(iii) *விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசித் திகதியில் உள்ளவாறு தொடர்ந்து ஐந்து வருடகால நிரந்தர பதவியில் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

***சம்பள அளவுத்திட்டம்*** : MA*1-2-2016: ரூபா 27,910.00 -10 × 300 - 7 × 350 - 12 ×600 - 12 × 710 - ரூபா 49,080.00*

*06.* ***சாரதி பதவி - பதவிகள் 03***

**கல்வித் தகைமைகள் :**

*வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்கள் :*

(i) *க. பொ. த. (சா./தர) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது குறைந்தபட்சம் இரண்டு விஷேட சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மற்றும்*

(ii) *கனரக வாகனங்களுக்காக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். கனரக வாகன உரிமம் பெற்ற பின்னர் மூன்றாண்டு கால அனுபவம் பெற்றிருக்க வேண்டும். (சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)*

உள்ளக விண்ணப்பதாரர்கள் :

(i) மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி உரிமம் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமம் பெற்றதன் பின்னர் வாகனம் ஓட்டுதல் தொடர்பாக குறைந்தபட்சம் மூன்று வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) முதன்மை அரை-திறன்பெற்ற (PL-2) அல்லது முதன்மை திறன்-பெறாத சேவை பிரிவில் ஐந்து ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : PL3-2016: ரூபா 26,290 -10 × 270 - 10 × 300 - 10 ×330 - 12 × 350 - ரூபா 39,490.00

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்** :

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;
(ii) பதவியின் கடமைகளை சிறப்பாகச் செய்வதற்கும், தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.
(iii) சிறந்த நன்னடத்தையைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

**வயது** : செயலாளர் மற்றும் ஆய்வு அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியில் உள்ளவாறு 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

ஏனைய பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியில் உள்ளவாறு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு ஏற்புடையதாகமாட்டாது.

**ஏனைய அனுகூலங்கள்** :வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

**ஆட்சேர்ப்பு முறை** :

மேற்கண்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் கட்டமைப்பு நேர்காணலில் தகுதியின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். மேலும், சாரதி பதவிக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரருக்கு நடைமுறைத் தேர்வு நடத்தப்படும்.

**சேவை நிபந்தனைகள்** :

* இவை மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்ட நிரந்தரப் பதவிகளாகும் ;
* ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி., ஊ. சே. நிதியத்திற்கு அடிப்படைச் சம்பளத்தின் 8% ஊழியர் பங்களிப்புச் செய்ய வேண்டும் மற்றும் தொழில்தருநர் 12%பங்களிப்புச் செய்வார் மற்றும் ஊ. ந. நிதியத்திற்கு தொழில்தருநர் 3% பங்களிப்புச் செய்வார்.

**விண்ணப்ப படிமுறை** :

நிறுவனத்தின் இணையத்தளமான <http://www.judgesinstitute.lk/> இல் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்து கீழ்க் குறிப்பிடப்படுகின்ற முகவரிக்கு 2024.10.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்படாத மற்றும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்து போன விண்ணப்பங்கள் தொடர்பான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை எழுத வேண்டும்.

பணிப்பாளர்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்,
இல. 80 (5 ஆவது மற்றும் 6 ஆவது மாடிகள்), அதிகரண மாவத்தை,
கொழும்பு 12.